**செய்தி வெளியீடு** **நாள் : 29.05.2024**

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்களின் உத்தரவின் பேரில், கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடியில் கடந்த 2021 முதல் 2023 வரை லைசன்ஸ் புதுப்பிக்காத (Non-renewal Licence) காய்கறி அங்காடியில் 39 கடைகள், கனி அங்காடியில் 9 கடைகள் மற்றும் மலர் அங்காடியில் 12 கடைகள் என மொத்தமாக இதுவரை 60 கடைகள் மூடி சீல் வைக்கப்பட்டுள்ளது.**

********

சென்னை, கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடியில், காய்கறி மற்றும் மலர் அங்காடியில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்களின் உத்தரவின் பேரில், கோயம்பேடு தலைமை நிர்வாக அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. மு. இந்துமதி அவர்களின் முன்னிலையில் கடந்த 2021 முதல் 2023 வரை லைசன்ஸ் புதுப்பிக்காத (Non-renewal Licence) 7 கடைகளுக்கு பலமுறை நோட்டீஸ் வழங்கியும், ஏழாம் கட்டமாக புதுப்பிக்காத 7 கடைகளுக்கு (28.05.2024), செவ்வாய்க்கிழமை அன்று சீல் வைக்கப்பட்டது.

சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தால் நிர்மாணிக்கப்பெற்ற கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகமானது தமிழ்நாடு குறித்துரைக்கப்பட்ட பொருட்களுக்கான அங்காடி அமைவிடம் மற்றும் முறைப்படுத்துதல் சட்டம் 1996-ன் படி அங்காடி நிர்வாக குழுவால் பராமரிக்கப் பெற்று வருகிறது. மேற்படி சட்டத்தின் படி, வளாக கடைகளனைத்திலும் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை உரிமம் புதுப்பித்தே வியாபாரம் மேற்கொள்ள அனுமதிப்பது அங்காடி நிர்வாக குழுவின் பணியேயாகும்.

இதனையடுத்து கடந்த 2021-2024ம் தொகுப்பாண்டிற்குரிய உரிமம் புதுப்பிக்காதவர்களை இனங்கண்டு, அத்தகைய கடைகளின் வியாபார நடவடிக்கையினை தடுக்கும் விதமாக மூடி முத்திரையிடுவது அங்காடி நிர்வாக குழுவால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறாக மூடி முத்திரையிடப்பட்ட கடைகளானது, காய்கறி அங்காடியில் 39 கடைகள், கனி அங்காடியில் 9 கடைகள், மலர் அங்காடியில் 12 கடைகள் என மொத்தமாக 60 **கடைகள்** மூடி முத்திரையிடப்பட்டுள்ளதோடு அதேபோன்று உரிமமின்றி வியாபாரம் நடத்திவரும் கடைகளின் மீதான தொடர் நடவடிக்கையானதும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக (28.05.2024), செவ்வாய்க்கிழமை அன்று ஏழாம் கட்டமாக வளாகத்தில் 7 எண்ணிக்கையிலான கடைகள் அங்காடி நிர்வாக குழு ஊழியர்களால் மூடி முத்திரையிடப்பட்டது. மேலும், வருங்காலத்தில் உரிமம் பெறாத கடைகளை மூடி முத்திரையிடும் பணி துரிதப்படுத்துவதோடு, நடப்பு உரிமம் புதுப்பித்தலுக்கான விண்ணப்பங்கள் சமர்பிக்க 31.05.2024 இறுதி நாளாகவும் தெரிவிக்கப்படுகிறது.

Verified @ RealEstate ™